அந்த ஆறு மாத காலத்தில் கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் என்னிடம் இல்லை. அப்படிக் கொடுத்திருந்தால் மீண்டும் அந்த நிலத்தைக் குத்தகைக்குப் பெற உரிமை பெற்றவர்களாவார்கள். அப்படி ஆறு மாத காலத்தில் கொடுத்தார்களா இல்லையா என்ற விவரம் இல்லை. அதை விசாரித்துப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்றுதான் கேட்டார்கள். நீட்டிப்பதற்கு சட்டச் சிக்கல்கள் இருப்பதால் இப்போது நீட்டிப்பதற்கில்லை என்று முடிவு எடுத்திருக்கிறது அரசாங்கம். நீட்டிப்பதாக நான் சொல்லவில்லை என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : பல கோர்ட்களில் கேஸ்கள் இருக்கும்போது நில வெளியேற்றம் செய்யக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது, அதற்குப் பின்னுல்தான் இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தான் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதையும் தெளிவாகச் சொன்னேன். அரசைப் பொறுத்தவரையில் இனும் எஸ்டேட் என்று சொல்லியிருக்கிறோம். நிலச்சொந்தக்காரர்கள் மைனர் இனுமாக டிக்ளேர் செய்யவேண்டுமென்று சொல்கிருர்கள். நாம் இனும் எஸடேட் என்று வாதித்துக் கொண்டிருக்கிறோம். நம் வாதத்தை நீதிமன்றத்தில் நிச்சயமாக ஏற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதில் வெற்றி பெற்று இனும் எஸ்டேட்டாக்கப்பட்ட பிறகு யார் யார் உழுது கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு சட்டப்படி உள்ள உரிமைகளை வழங்க இருக்கிறோம். ஆனல் காலதாமதம் தவிர்க்க முடியாது, சட்டம் குறுக்கிடும் காரணத்தால்.

(5) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவுக்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் 1973-74-ம் ஆண்டுக்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

4. மாண்புமிகு தொழில் அமைச்சர்.

5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

6. திரு. து. ப. அழகமுத்து.

7. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

8. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்.

9. திரு. கே. டி. கே. தங்கமணி.

10. திரு. ஏ. ஆர். பெருமாள்.

11. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.

12. டாக்டர் எச். வி. ஹாண்டே.

13. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

14. திரு. இ. எஸ். தியாகராசன்.

பேரவையின் 193 (1) வது விதியின்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இக் குழுவின் தலைவர் ஆவார்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு சட்டப் பேரவையின் 214 (1) வது விதியின்கீழ் 1973-74-ம் ஆண்டுக்கு பின்வரும் சட்டப்பேரவை உறுப்பினர்களை அரசினர் உறுதிமொழிக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இ. எஸ். தியாகராசன்.

2. திரு. கே. எஸ். கோதண்டராமையா.

3. திரு. என். கே. பழனிசாமி.

4. திரு. எஸ். அழகுத் தேவர்.

5. திரு. ஏ. சுவாமிதாஸ்.

6. திரு. துரை கோவிந்தராசன்.

7. திரு. நா. வெ. குருசாமி.

8. திருமதி வி. ப. பழனியம்மாள்.

9. திரு. எஸ். முருகையன்.